2 பக்கங்கள் 15 காசுகள்

தீக்கதிர்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) நாளிதழ்

பதிவு எண் எம். 8798

கதிர் 12 | மதுரை | 29—1—75 | புதன் | மலர்: 327

அமெரிக்காவின் யுத்தப்பொருளாதாரம்

வாஷிங்டன், ஜன. 26—

உலகத்திலேயே எல்லா நாடுகளையும்விடராணுவ ஆயுதங்கள் விற்பனையில் முதலிடம் வகிப்பது அமெரிக்காதான். 1963-ம் ஆண்டிலிருந்து 1973-ம் ஆண்டு வரை — 10 ஆண்டுகளில் 2 ஆயிரத்து 70 கோடி டாலருக்கு (23 ஆயிரத்து 260 கோடி ரூபாய்) விற்பனை செய்துள்ளது. ராணுவ தளவாடங்களை விற்பனை செய்து கொள்ளை லாபம் சுருட்டவே உலகத்தில் யுத்தத் தீயை மூட்டிவிட்டுக் கொண்டே இருக்கிறது.

எண்ணை உற்பத்தியில் சோவியத் யூனியன் அமெரிக்காவை மிஞ்சியது

மாஸ்கோ, ஜன. 25—

எண்ணை உற்பத்தியில் அமெரிக்காவை மிஞ்சியதன் மூலம் சோவியத்யூனியன் உலகத்திலேயே அதிக எண்ணை உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது, 1974-ம் ஆண்டில் 45 கோடியே 90 லட்சம் டன் எண்ணை உற்பத்தி செய்ததன் மூலம் எண்ணை உற்பத்தி நாடுகளில் முதலிடம் பெறுகிறது.

உள்கட்சித் தகராறுகள் தீர்க்கப்பட முடியாததால்

உப-தேர்தல்களை ஒத்திபோடுவதா

மார்க்சிஸ்ட் கட்சி பொலிட்பீரோ காங்கிரஸ் அரசுக்கு கண்டனம்

கல்கத்தா, ஜன 24 —

சொந்தக் கட்சியின் உள்கட்சிப் பூசல்களை முன்னிட்டு உபதேர்தல்களை நடத்தாமல் காலவரையின்றி தள்ளிப் போடும் மத்தியரசின் போக்கை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட்பீரோ கடுமையாக கண்டித்துள்ளது.

அவ்வறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தொகுதிக்கான உபதேர்தலை காலவரையின்றி ஒத்திப்போட்டதற்கு எதிராகவும்சங்க்ரூர் [பஞ்சாப் மாநிலம்] நாடாளுமன்ற தொகுதிக்கு உறுப்பினர் இன்றி ஒன்னரை வருடங்கள் கடந்த பின்பும் அத்தொகுதியில் உபதேர்தல் நடத்தாமல் இருப்பதற்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட்பீரோ கடுமையான கண்டனத்தை தெரிவிக்கிறது.

ஒத்திப்போடப்பட்டதன் காரணம் என்ன?

திருவனந்தபுரத் தொகுதி வாக்காளர்கள், தங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினரை தேர்ந்தெடுக்குமாறு, ஜனாதிபதியின் அறிவிப்பு ஜன 25-ல் வெளியிடப்படும் என தேர்தல் கமிஷன் ஏற்கெனவே அறிவித்திருந்தது.

ஆனால், ஜனவரி 14-ல் பிரதமர் இந்திரா காந்தி திருவனந்தபுரம் சென்றார். 15-ந் தேதி ஜனாதிபதியின் அறிவிப்பு வெளியிடப்படுவதற்குப் பதிலாக திருவனந்தபுரம் நாடாளுமன்றத் தொகுதியின் தேர்தல் காலவரையின்றி ஒத்திப்போடப்பட்டது என்ற அறிவிப்பு ஜனவரி 15-ல் தேர்தல் கமிசனால் வெளியிடப்பட்டது.

காலவரையின்றி திருவனந்தபுரத் தொகுதித் தேர்தல் ஒத்திப்போடப்பட்டதற்கு எந்தவிதக் காரணமும் காட்டப்படவில்லை, அதேபோல் சங்க்ரூர் தொகுதியில் தேர்தல் நடத்தப்படாமல் இருப்பதற்கு எவ்விதக் காரணமும் கொடுக்கப்படவில்லை.

காரணம் எதுவாக இருக்க முடியும்? அத்தொகுதிகளுக்கான வேட்பாளர்களை முடிவு செய்வதில் காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள உள்கட்சி தகராறுகள் தீர்க்கப்படவில்லை என்ற ஒரு காரணம் தான் இருக்க முடியும்.

பீகார் மாநிலத்தின் சட்ட மேலவைக்கான தலைவரை தேர்ந்தெடுக்க கூட்டுமாறு அம்மேலவைக்கு அறிவிப்பு கொடுத்துவிட்டு அதற்கான தேர்தல் காலவரையின்றி ஒத்திப் போடப்பட்டுள்ளது.

உடனடியாக தேர்தல் நடத்துக

அதிருப்தி அடைந்த காங்கிரஸ் உறுப்பினர் அக்கட்சியின் அதிகார பூர்வமான வேட்பாளர்க்கு எதிராக போட்டியிட்ட போதே தேர்தல் ஒத்திவைப்பு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இவைகள் காட்டுவதென்ன? காங்கிரசுக்கட்சியின் நலனுக்கு உகந்ததானல், வாக்காளர்கள் தங்களுடைய நாடாளுமன்ற பிரதிநிதியை வைத்துக் கொள்வதை தடுக்கவும், பார்லிமெண்டரி ஜனநாயகத்தின் எல்லா அம்சங்களையும் அலட்சியப்படுத்தவும் காங்கிரஸ்கட்சி தயாராகிவிட்டது என்பதற்கே மேற்கூறிய நிகழ்ச்சிகள் உதாரணங்களாகும்.

மேலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட்பீரோ, அத்தொகுதிகளுக்கு உடனடியாக தேர்தல் நடத்துமாறு அரசாங்கத்தை வற்புறுத்துகிறது.

விலைவாசி—வறட்சி—பஞ்சத்தால் பட்டினிச்சாவை எதிர்நோக்கும்

கிராமங்களில் மார்க்சிஸ்ட் தோழர்கள்

101 சைக்கிள்களில் 34 கிராமங்களுக்குச் சென்று கையெழுத்து இயக்கம்

பஞ்சப் பிரதேசமாக அறிவிக்கும்படி கலெக்டரிடம் வற்புறுத்தல்

மதுரை, ஜன, 27—

இந்தியக் 'குடியரசு' நாளான நேற்று [26—1—75] ஆளும்கட்சியினர் 'கொடி'யேற்று விழாக்கள் நடத்திக் கொண்டிருந்த சமயத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் இயக்கத்தோழர்கள்- மதுரை தெற்குத்தாலுகாவில் உள்ள கிராமங்களுக்கு கொளுத்தும் வெயிலில் சைக்கிள்யாத்திரையாகச்சென்று கொடிய வறுமைக்கும் பஞ்சத்திற்கும் ஆளாகி பட்டினிச்சாவை நோக்கித் தள்ளப்பட்டிருக்கும் ஏழை மக்களைச் சந்தித்து அவர்களது நிலையை- குறையைக் கேட்டறிந்தனர், அவர்களது கோரிக்கைகளை மகஜர்வடிவில் தயாரித்து, 3 ஆயிரத்து 200 க்கு மேற்பட்ட மக்களிடம் கையொப்பங்கள்வாங்கினர்.

கட்சியின் மதுரைக் கமிட்டிச் செயலாளர் வி. கார்மேகம், தமிழக ஜனநாயக மாதர் சங்கத்தலைவர் கே. பி. ஜானகியம்மாள், வி. வீரபத்திரன், எம், முனியாண்டி, கே. பூச்சி, கே. எம. கணபதி ஆகிய ஆறுதோழர்களைக்கொண்ட குழு இன்று முற்பகலில மாவட்டக்கலெக்டரைச் சந்தித்து அந்த மகஜர்களை அளித்துப் பேசினர்.

பெருமளவிலான பட்டினிச்சாவுகள் ஏற்படும் அபாயத்தைச்சுட்டிக்காட்டி இப்பகுதியை பஞ்சப் பிரதேசமாக அறிவித்து உடனடி நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினர்.

கட்டாய ரேசனை அமுலாக்கி, 500குடும்பங்களுக்கு ஒரு நியாய விலைக்கடை வீதம் திறந்து- சர்வகட்சி கண்காணிப்புக் குழுக்கள் மூலம் அரிசி, மற்றும் உணவுப்பொருட்களை நாள் ஒன்றுக்கு 500 கிராம் வீதம்வழங்குதல், கிணறுகளை ஆழப்படுத்தியும் புதிய கிணறுகள் தோண்டியும் குடிநீர்க்கஷ்டத்தைப்போக்குதல்,

நிரந்தரமான விளைச்சலுககு உத்தரவாதப்படுத்தும் வகையில் சமுதாயக் கிணறுகள் நிறுவுதல்

நடப்பு பசலிக்குரிய கிஸ்தி மற்றும் செஸ்வரிகளை ரத்து செய்தல் ஆகிய பொதுக்கோரிக்கைகளுடன் ஒவ்வொருஊரின் குறிப்பிட்ட விஷேச கோரிக்கைகளும் அந்த மகஜர்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஒவ்வொரு ஊரின் விஷேச கோரிக்கைகளை அறியும் பொருட்டு முதல் நாளே (25—1—75) தோழர்கள் கே. பூச்சி, கே. எம். கணபதி, கே. சுப்பையா ஆகியோர் ஒவ்வொரு ஊராகச்சென்று கேட்டறிந்து வந்தனர்.

பெருவாரியான கிராமங்களில்- பெரும்பாலும் மக்களும் கால்நடைகளும் இல்லையென்றுசொல்லலாம் ஆட்சியாளர்களின் கொள்கையின் விளைவால் விலைவாசிஉயர்வு வேலையின்மை மழையின்மையால் வறட்சி. பஞ்சம் ஆகியவற்றின் தாக்குதல்களைத் தாங்கமாட்டாது மக்கள் தத்தம் ஊர்களை விட்டு வெளியேறி விட்டனர்.

மீதி தங்கியிருக்கும் மக்களோ, தத்தம்ஆடு,மாடு பண்ட, பாத்திரங்களை விற்றும், கருவேலமரங்களையும், வேர்களையும் வெட்டியும் புல்அறுத்தும் வேறிடங்களி கொண்டுபோய் விற்றும் சுண்ணாம்புக்கல் வெட்டியும் தங்களதுவயிற்றை ஓரளவு கழுவிவருகிறார்கள்.

இப்படிஎத்தனை நாட்களுக்குத்தான் வாழ்நாளைக்கழிக்க போகிறார்களோ பெருங்குடியில்ஒருவர் பல நாட்கள்பட்டினிகிடந்துஇறந்துவிட்டார் இதே நிலை நீடிததால் இன்னும் பத்து, பதினைந்து நாட்களில் பெரும் அளவிலான பட்டினிச்சாவுகளை இக்கிராமங்கள் சந்திக்க வேண்டியிருக்கும்.

குடும்ப அடையாளக் கார்டுகள் கொடுக்கப்பட்டுள்ள இப்பகுதிகளில்—'நடமாடும் ரேசன்கடை'என்பது பெயரளவில்தான் வந்து செல்கிறது. வந்தவுடன் தண்டோரா போடப்படுகிறதாம். இதைக்கேட்டு மக்கள் வருமுன்பு அரிசியை கண்களில் காட்டி விட்டு வண்டி புறப்பட்டுச் சென்று விடுமாம்.

சுத்திமுத்திப் போனால் ஒரு மாதத்துக்கு அரை கிலோ அரிசிதான் ஒரு கார்டுக்கு வழங்கப்படுகிறதாம்—இவ்வாறு பாரப்பட்டி என்ற கிராமத்தில், அரை கிலோ அரிசி கொடுக்கப்பட்ட கொடுமையை எதிர்த்து அக்கிராம மக்கள் கிளர்ந்தெழுந்தது கண்டு நடமாடும் வண்டி ஓடி விட்டதாம்.

எனவே, இப்பகுதிகளில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரைக் கமிட்டித் தோழர்கள் தலைமையில் 5 அணிகளாக 101 சைக்கிள்களில் தோழர்கள் சுற்றுப் பயணம் செய்து கையொப்பங்கள் வாங்கினர்.

அவனியாபுரம்,

அவனியாபுரம் பகுதியில் தோழர்கள் கே. எம். கணபதி, எம். முனியாண்டி எம். கணபதி ஆகியோர் தலைமையில் சென்ற குழு பெருங்குடி, வளையபட்டி

(2-ம் பக்கம் பார்க்க)

முதலாளித்துவ இத்தாலியில் தொழிலாளர் எழுச்சி

ஒரு கோடியே 30 லட்சம் பேர் பொது வேலை நிறுத்தம்

ரோம், ஜன 27—

முதலாளித்துவ நாடான இத்தாலியில், ஒரு கோடியே 30 லட்சம தொழிலாளர்கள் கடந்த 23-ந் தேதியன்று பொது வேலை நிறுத்தம் செய்தனர்.

பொதுத்துறை மற்றும் தனியார் துறைகளைச் சார்ந்த இத்தொழிலாளர்களின் பொது வேலை நிறுத்தத்தால் அன்று இத்தாலி நாடே ஸ்தம்பித்துவிட்டது.

வேகமாக அதிகரித்து வரும் வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு ஆகியவற்றை எதிர்த்தும் உரிமைப் போராட்டங்களை ஒடுக்க புதிதாக உருவெடுத்துவரும் பாசிசத் தாக்குதல்களைக் கண்டித்தும் நடந்த இந்த பொதுவேலைநிறுத்தத்துக்கு பொது மக்களும் முழு ஆதரவு அளித்தனர்.

பி ஆர் சி தொழிலாளர் உண்ணுவிரதம்

ரமணி தலைமையில் ஆதரவு ஊர்வலம்

மதுரை, ஜன 27—

இங்குள்ள மத்திய பேருந்து நிலையம் முன்பு பாண்டியன போக்குவரத்துத் தொழிலாளர்கள் தலைவர்கள் மூவர் கோரிக்கைகளை வற்புறுத்தி குடியரசு தினமான 26-ந் தேதி முதல் தொடர்ந்து உண்ணுவிரதம் மேற்கொண்டுள்ளனர்.

பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் உள்ள சி ஐ டி யூ சங்கத் தலைவர் ஏ வி ராஜு, அ தி மு க சங்கப் பொதுச் செயலாளர் கே கனகராஜ், ஆளும் காங்கிரஸ் சங்கத் தலைவர் திருப்பெருந்துறை ஆகியோரும் மேற்கொண்டுள்ள 5 உண்ணுவிரதத்தை, தமிழ்நாடு மின்சாரத் தொழிலாளர் சங்க மதுரைத் திட்டக் கிளை துணைத் தலைவர் தோழர் கே வாசுதேவன் மாலை அணிவித்து துவக்கி வைத்தார்.

பஸ்களில் குழந்தைகளுக்கு மீண்டும் அரை டிக்கட்டை அமுலாக்குதல், குறைந்த பட்ச சம்பளம் [illegible]0, உயரும் புள்ளி ஒவ்வொன்றுக்கும் [illegible] பஞ்சப்படி, [illegible] கல்களை ரத்துச் செய்தல் குடும்பப் பாஸ் மற்றும் பேட்டா, அலவன்ஸ், பிராவிடண்ட் வசதிகள் உட்பட பல கோரிக்கைகளை நீண்ட காலமாக வற்புறுத்தி வருகின்றனர்.

இந்த உண்ணுவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும், வாழ்த்துக் கூறியும் தொழிற் சங்கத் தலைவர்கள் எஸ் மன்னர் சாமி, வி. வீரபத்திரன் [சி ஐ டி யூ], மாணவர் தலைவர் சத்தியநேசன, (இந்திய மாணவர்சங்கம்), மாரிமுத்து (காங்.), அரசு நாச்சியப்பன் (காங்கிரஸ்), என் எஸ் வேலு (அ தி மு க), கே அப்பன் ராஜ் (ஸ்தா காங) மற்றும் பல அரசியல் கட்சித் தலைவர்கள் கா காளிமுத்துஎம்எல்ஏ பாலகுருவாரெட்டியார், இ வி. கே. சம்பத், கே. எஸ். ராமசாமி, ஆ. ரத்தினம், டி. பி. எம். பெரியசாமி, கருசீமைச்சாமி, மற்றும் ஏராளமானோர் பேசினர்.

மின்தொழிலாளர் ஆதரவு ஊர்வலம்

மின்வாரியத்தைச்சார்ந்த தொழிலாளர்களும், ஊழியர் [illegible] 300 [illegible] ம்பட்ட [illegible] தலைவர் கே. ரமணி, மின் தொழிலாளர்மத்திய அமைப்பின் பொதுச் செயலாளர் து. ஜானகிராமன் தலைமையில் ஊர்வலமாக வந்து உண்ணுவிரதிகளுக்கு வாழ்த்தும் ஆதரவும் தெரிவித்தனர்.

முன்னதாக கடந்த 24ந் தேதியன்று கோரிக்கைகளை வற்புறுத்தியும் நிர்வாகத்தின் பிடிவாதபோக்கை எதிர்த்து சி ஐ டி யூ, அ தி மு க, காங்கிரஸ் சங்கங்கள் சார்பில் மதுரை, திண்டுக்கல், பெரியகுளம், காரைக்குடி, புதுக்கோட்டை ஆகிய இடங்களில் நூற்றுக்கணக்கான ஊழியர்களும் பொது மக்களும் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டங்கள் நடந்தன.

திண்டுக்கல்லில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் ஜனநாயக மாதர் சங்கத்தைச் சார்ந்த பெண்கள் ஏராளமானோர் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

துணி விலைகள் மீண்டும் உயர்கிறது

பம்பாய், ஜன. 27—

[illegible]யாவின் மேற்குட் [illegible]ளில்உள்ள பஞ்சா? [illegible] துணிகளின் விலை [illegible] த்திலிருந்து [illegible] வீதம் வரை [illegible] ர்த்தப் [illegible]ளன.

மிக [illegible] ரக் [illegible] களுக்கு [illegible] சதவீத [illegible] (நந்து 15சதவீதமும் தரம [illegible] [illegible]ளுக்கு [illegible]0 சதவீதமும் பொ[illegible]லான மக்கள் உபயோகிக்கும் துணிகள் மீது 25 [சதவீ]தமும் விலை உயர்த்தப்பட்டுள்ளன.

சம்பள உயர்வு, உற்பத்திச் செலவு அதிகரிப்பு ஆகியவைகள் காரணமாகவே விலைகள் உயர்த்தப்பட்டுள்ளன என்று வழக்கமாக கூறுவதையே கூறி விலை உயர்வை நியாயப்படுத்தியுள்ளது இந்திய பருத்தி ஆலை சம்மேளனம்.

மேற்கு வங்கத்தில் மாணவர் காங்கிரஸ் குண்டர்களின் கொலை வெறி

பேராசிரியர், எஸ்.எப்.ஐ. மாணவர்கள் மீது கத்தி, கம்பி கொண்டு தாக்குதல்

கல்கத்தா, ஜன. 25—

இங்குள்ள பிஷ்னுபூர் ராமானந்துகல்லூரியில், இந்திரா காங்கிரசைச் சார்ந்த மாணவர் அமைப்பான சத்ர பரிசத் குண்டர்கள், அக்கல்லூரியின் பேராசிரியர் மீதும் இந்திய மாணவர் சங்க (எஸ் எப் ஐ] தோழர்கள் மீதும் கொலை வெறித் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இக்கல்லூரிக்கு நடந்த மாணவர் பேரவைத் தேர்தலை யொட்டி அக்குண்டர்கள் நடத்திய இத்தாக்குதலில் கத்தி, இரும்புத்தடி ஆகியவறைப் பயன்படுத்தி படுகாயப்படுத்தியுள்ளனர்.

பேராசிரியர் மீது தாக்குதல்

பேராசிரியரான அசின்தாராயின் தலையில் குண்டர்கள் இரும்புத் தடியைக் கொண்டு தாக்கியதால், அவர் மண்டை உடைந்து பலத்த காயத்துக்கு ஆளாகி சிகிச்சை பெற்றுவருகிறார். இந்த பேராசிரியர் பிஷ்னப்பூர் பகுதி மார்க்சிஸ்ட் கட்சியின் செயலாளருமாவார்.

இத்தாக்குதலை நடத்திய ரவுடிகளைக் கைது செய்வதை விட்டுவிட்டு, எஸ். எப். ஐ. யைச் சேர்ந்த 4 மாணவர்களை போலீஸ் வேண்டுமென்றே கைது செய்துள்ளது.

பேராசிரியர் தாக்கப்பட்டதைக் கண்டித்தும், போலீசின் தான்தோன்றித்தனத்தைஎதிர்த்தும்தாக்குதல் நடந்த நாளன்று பிற்பகலில் இந்திய மாணவர் சங்கமும் ஜனநாயக வாலிபர் சங்கமும் (டி.ஒய்.எப்] கூட்டாக ஓர் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தியது,

இதில் ஏராளமான இளைஞர்களும் மாணவர்களும் கலந்து கொண்டதைக்கண்டு ஆத்திரமுற்ற அதே ரவுடிக் கும்பல், அந்த ஊர்வலத்தைக் கலைக்கவேண்டும் என்ற நோக்கோடு, ஊர்வலத்தினர் மீது மீண்டும கொலை வெறி தாக்குதலை நடத்தியது.

ஜனநாயக வாலிபர் சங்கத்தின் பங்குரா மாவட்டச் செயலாளரான தோழர் பிஜய் சர்க்காரைக் குறிவைத்து கத்தியால் குத்தின [illegible] மற்றும் பல[illegible] மீது [illegible] ஆயுதங்களைக்கொண்டு தாக்கினர். மேலும 20 பேர் படுகாயமுற்று சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஆர்ப்பாட்டம், ஊர்வலம் வேலை நிறுத்தம்

பேராசிரியர் தாக்கப்பட்டதைக் கண்டித்தும், குற்றவாளிகள் மீது நடவடிக்கை கோரியும் அக்கல்லூரியின் பேராசிரியர்கள் அனைவரும் தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்தனர்.

பேராசிரியரும் மாணவர்களும் இளைஞர்களும் தாக்கப்பட்டதை கண்டித்து பங்குராவில் பெரும் ஆர்ப்பாட்டமும் ஊர்வலமுன் நடந்தது. இத்தாக்குதலுக்கு அரசியல் கட்சிகள் பலவும் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

மத்தியஅரசு ஊழியர்களுக்கு பஞ்சப்படிபாக்கி

புதுடெல்லி, ஜன. 25—

மத்திய அரசு ஊழியர்களுக்கு கொடுக்கப்பட வேண்டியுள்ள 5 பஞ்சப்படி பாக்கிகளில் 3பஞ்சப்படியை தருவதுபற்றிய அதிகார பூர்வ அறிவிப்பு நிதி அமைச்சகத்தால் இன்று வெளியிடப்பட்டது.

இவ்வறிவிப்பின்படி ஒவ்வொரு தவணை பஞ்சப்படியிலும் ரூ. 300 வரை சம்பளம் பெறுபவர்கள் அவர்களின் சம்பளததில் 4 சதவீதமும் ரூ. 300 க்கு அதிகசம்பளம் பெறுபவர்கள் 3 சத வீதமும் பெறுவார்கள்.

ரூ. 900க்கு அதிகமான ஊதியம் பெறுபவர்கள் ஜூன் 1-லிருந்து கூடுதலானபஞ்சப்படியும்பெறுவர். இந்த வரம்பு ரூ 1600 வரை ஊதியம் பெறுபவர்கள்வரை உண்டு என்றும் அவ்வறிக்கை கூறுகிறது.

இக்கூடுதல் பஞ்சப்படி மாதம் ரூ 2250 வரை சம்பளம் பெறுபவர்களுக்கு செப்டம்பர் 1 லிருந்து கொடுக்கப்படும் என்றும் வெளிநாட்டமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

மத்திய அரசாங்கம் கொடுக்கவிருக்கும் 3 பஞ்சப்படியின் காரணமாக அரசுக்கு செலவாகக் கூடியது வருடத்துக்கு ரூ. 98 கோடி. ஆனல் உண்மையில் ஆகப் போகும் செலவு 12 கோடி ரூபாய்தான்.

எப்படியெனில்98கோடியில் 49 கோடிரூபாய் கட்டாய சேமிப்பில் முடிக்கப்படும். மீதியில். 37 கோடி ரூபாய் பிராவிடெண்ட் பண்ட நிதியில் சேர்க்கப்படும்.

தீக்கதிர்

ஜனாதிபதி உரை

மீண்டுமொரு குடியரசு தினம் வந்தது, சென்றது. வழக்கம்போல் ஜனாதிபதியின் உரை ஒலிபரப்பப்பட்டது. ஜனாதிபதி தானாகவே ஒரு உரையை வெளியிடுவதில்லை. மத்திய சர்க்காரின் நிலையும் கொள்கையுமதான் இந்த சம்பிரதாய உரை மூலம் மக்கள் முன்பு வைக்கப்படுகிறது.

நமது சாதனைகளையும் குறைபாடுகளையும் கணக்கு பார்த்துக் குறைபாடுகளை நீக்கிக்கொள்ள வேண்டிய முக்கிய நாள் இது என்று துவங்கும் இந்த உரை, எந்தக் குறைபாட்டையும் சுட்டிக் காட்டாமல், ஏற்றுக் கொள்ளாமல், பொறுப்பைத் தட்டிக் கழிக்கிறது.

ஆயினும் இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியையும், விலைவாசி உயர்வு, வேலையின்மை, பொருள் தட்டுப்பாடு முதலியவற்றால் மக்கள் பாதிக்கப்படுத் திண்டாடும் பேருண்மையையும்ஜனாதிபதி உரைமூடி மறைக்க முடியவில்லை. நேர்மையிருந்தால் காங்கிரஸ் அரசாங்கம் கடைப்பிடித்து வந்துள்ள கொள்கைகளே இந்த அவல நிலைமைக்குக் காரணமென்று ஏற்று, இதிலிருந்து மக்கள் மீட்சி காண்பதற்கு மாற்று வழிகள் என்னென்னபரிசீலனை யாவது இந்த உரையில் காணப்பட்டிருக்கும்.

அதற்கு மாருக "சீர்குலைவையும் குழப்பத்தையும் நோக்கி நாடு போய்க்கொண்டிருக்கிறது"......

"நிலைமையின் கடுமையை உணரும்படி எல்லா அரசியல் கட்சித் தலைவர்களையும் வேண்டிக் கொள்ளுகிறேன்; சீர்குலைவையும் குழப்பத்தையும் நோக்கிச்சென்று கொண்டிருக்கும் இந்தப்போக்கை தடுத்து நிறுத்த ஸ்தூலமான நடவடிக்கைகள் எடுக்கும்படி அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று இதர அரசியல் கட்சிகளையும் இவ்வளவு நிலைமைக்குப் பொறுப்பாக்க முயற்சிக்கிறார் நமது ஜனாதிபதி.

"பலாத்காரம்" தலைதூக்கியுள்ளதாகக் கவலைப்படுகிறார் ஜனாதிபதி. இந்தக் குற்றச்சாட்டுக்கு பதில் கூற வேண்டியவர்கள் ஆட்சி பீடத்திலிருப்பவர்கள்தானே; மேற்கு வங்கத்தில் சென்ற பொதுத்தேர்தலில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மெஜாரிட்டி பெற்று ஆட்சிக்கு வந்து விடாமல் தடுக்க துப்பாக்கிகளுடனும் ரௌடிகளுடனும் அசுரர் அட்டகாசம் நடத்தியவர்கள் யார்? இதேபோலவே, இன்று கேரளத்திலும் அசுர அடக்குமுறையை ஏவிவிட்டது யார்? ரெயில்வே வேலைநிறுத்தத்தின்போது நாடு கண்டிராத அடக்குமுறையை ஏவிவிட்டது யார்? குஜராத்திலும் பீகாரிலும் சாதாரண போலீஸ் படை போதாதென்று, மத்திய ரிசர்வ் போலீஸ், பிரதேச ராணுவம், எல்லைப்பாதுகாப்புப்படை, "ஹோம் கார்டுகள்" ஏன் அசல்ராணுவத்தையுமே கூட மக்களின் கோரிக்கைகளை அடக்க உபயோகப்படுத்தவில்லையா?

இன்று நடக்கும் எண்ணற்ற உழைப்பாளிமக்களின் போராட்டங்களை நசுக்க எவ்வளவு ஊரடங்குச் சட்டங்கள், தடை உத்தரவுகள், துப்பாக்கிப் பிரயோகங்கள் தடியடிகள், சிறைப் பிடிப்புகள், சித்திரவதைகளும்—காங்கிரஸ் ஆட்சியின் தர்பாரிலதானே நடக்கிறது. எதிர்க்கட்சிகளை நோக்கி "பலாத்காரம்" என்று கூச்சலிட்டு என்ன பயன்?

விலைவாசி உயர்வுக்கும் உணவு நெருக்கடிக்கும் பொறுப்பாளியார்? உணவுக்காக அமெரிக்காவிடமும் மற்ற நாடுகளிடமும் இடைவிடாது பிச்சையெடுக்கும் நிலையில் கொண்டு, உணவு விஷயத்தில் சொந்தக்காலில் நிற்க வேண்டுமென்று உபதேசிக்கிறார், மக்களுக்கு, நம் ஜனாதிபதி. கேடுகெட்ட நிதி நாடு சுபிரமணியம் அறிவிக்கையின் இந்த வருடத்திலும் மட்டுமல்ல அடுத்த வருடமும் அமெரிக்காவிலிருந்து உணவுதானிய இறக்குமதிக்கு ஏற்பாடு செய்து விட்டு வந்திருக்கிறேனென்று கூறியும் இவ்வாறு பேசுகிறார் ஜனாதிபதி.

உழைப்பாளிமக்கள் கடுமையாகவும் நேர்மையாகவும் உழைக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார். மத்திய அரசு மக்களைப் பார்த்து சேலி செய்கிறதா என்று தான் கேட்கத் தோன்றுகிறது. யார் வேலைசெய்ய மறுத்தார்கள்? வேலை எங்கே இருக்கிறது லட்சக்கணக்கானவர்களுக்கு? என்றுமிராத நேர்மையில்லாத திண்டாட்டத்தை நாட்டில் சிருஷ்டித்துள்ள ஒரு அரசின் சார்பாகப் பேசும் ஜனாதிபதி துயரத்தில் ஆழ்ந்துள்ள மக்களை நையாண்டி செய்கிறார்.

விவசாய உற்பத்தி அதிகரிப்புக்கு ஜனாதிபதியின் யோசனை நவீன விஞ்ஞானமுறைகள், நிலச்சீர்திருத்தம் நல்ல. தொழில் உற்பத்தி அதிகரிப்புக்கு அவரது யோசனை தொழிலாளிகள் 'நேர்மையாக' உழைப்பது, தொழிலாளிகளின் நியாயமான கோரிக்கைகளை வழங்குவதல்ல, முதலாளிகளின் கட்டுப்படுத்துவதல்ல. மக்களின்பால் ஒரு உதாசீனக் கண்ணோட்டம் கொண்டுள்ள ஜனாதிபதிஉரை அதேசமயத்தில் மக்கள் உற்சாகமாக நாட்டுக்காகப் பணியாற்ற முன்வரவேண்டுமென்று கோருவது வெட்டி சம்பிரதாயப் பேச்சு.

காங்கிரஸ் அரசு தனது மக்கள் விரோதக் கொள்கைகளை மாற்றிக்கொள்ளுமென்பதற்குரிய எவ்வித அறிகுறி ஜனாதிபதி உரையில் இல்லை. இந்த ஞானோபதேசம் பயனற்றது. மாற்றும் மீது இன்றைய நிலைமைக்குப் பழியைப் போட்டு, காங்கிரஸ் அரசு தனது பொறுப்பைத் தட்டிக்கழிக்கும் ஒரு முயற்சியாகவே மக்கள் ஜனாதிபதியின் உரையைக் கருதுவார்கள்.

மேற்கு வங்கத்தில்

மோசடி ஆட்சியில் கொலை, கொள்ளை

கல்கத்தா, ஜன 27—

மேற்கு வங்க மாநிலத்தில் மோசடித் தேர்தல் மூலம் 1972ல் அரசாங்கத்தைக் கைப்பற்றிய சித்தார்த்த சங்கர்ரே ஆட்சியில் கடந்த இரண்டுவருடங்களாக சராசரி ஒருநாளுக்கு இரண்டு கொலைகள் நடந்துள்ளன.

இத்தகவலை போலீஸ் கமிஷனரே, கடந்த15ந்தேதி செய்தியாளர்களுக்கு கொடுத்துள்ளார். இதில் அரசியல் கொலைகளும் உட்படும்.

1974 ஆம் ஆண்டில் மட்டும் 842 கொலைகளும், 1165 கொள்ளைகளும் நடந்துள்ளன.

கல்கத்தா மாநகரில், 1973-ல் கொலைகளின் எண்ணிக்கை 61 ஆக இருந்தது, 1974ல் 69ஆக உயர்ந்துள்ளது.

இம்மாநிலத்தில் 1973ல் 880 கொலைகளும், 1206 கொள்ளைகளும் நிகழ்ந்துள்ளன.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தமிழ் மாநிலக்குழு சார்பில தீக்கதிர் அச்சகத்தில் (6-16 பைபாஸ் ரோடு, மதுரை 625018) அச்சிட்டு வெளியிடுபவர் ஆசிரியர் கே. முத்தையா.

துறைமுகத் தொழிலாளர் போராட்டம் வாபஸ்:

அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் அரசுக்கு அடிபணிந்துவிட்டன

தோழர் பி. டி. ரணதிவே கண்டனம்

கல்கத்தா, ஜன. 27—

துறைமுகத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தை வாபஸ் பெற்றதின் மூலம் ஏ.ஐ.டி.யூ.சி., ஐ.என்.டி.யூ.சி., எச்.எம்,எஸ். ஆகிய அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களின் தலைமைகள் அந்தத் தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு துரோகம் செய்து விட்டன என்றும் மத்திய அரசுக்கு அடிபணிந்து விட்டன என்றும் தோழர் பி. டி. ரணதிவே கண்டித்துள்ளார்.

சி.ஐ.டி.யூ.வின் அகில இந்திய தலைவர் தோழர் பி.டி.ரணதிவே, சென்ற21ம் தேதியன்று விடுத்த கண்டன அறிக்கையிலேயே அவ்வாறு கூறியுள்ளார்.

துறைமுகத் தொழிலாளர்களின் கோரிக்கைகள் முழுவதற்கும் பாதகமான ஒப்பந்தத்தை அந்தச் சங்கங்கள் ஏற்றுக் கொண்ட முறையானது, நாடு முழுவதும் தொழிலாளர்களின் இயக்கத்திற்கு ஒரு பெரும் தீங்கு விளைவிக்கக் கூடியது என்பதை தோழர் பி.டி.ஆர் தமது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

போராட்டத்தை வாபஸ் பெறுவதற்கு முன்பாக, தொழிலாளர்களுடன் கலந்தாலோசிக்கக்கூட, அங்கீகரிக்கப்பட்ட அச்சங்கங்களின் தலைமை முன்வரவில்லை.

இந்த அணுகுமுறையானது; புதிய சம்பள நிர்ணய விஷயத்தில், முற்றிலும் தொழிலாளர்களுக்கு எதிரான நிலைப்பாட்டினை மேற்கொள்ள அரசுக்கு தெம்பூட்டுவதாக அமையும்.

சம்பள நிர்ணயக் குழுவில் தொழிற்சங்க பிரதிநிதிகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற முக்கியமான கோரிக்கையை, ஏ.ஐ.டி.யூ.சி., ஐ.என்.டி.யூ.சி, எச்.எம்.எஸ் சங்கத் தலைமைகள் கைவிட்டுவிட்டதையும் தோழர் பி. டி. ரணதிவே தமது அறிக்கையில் கண்டித்துள்ளார்.

எஸ்.எப்.ஐ. வெற்றி

31-ல் 19-ஐ கைப்பற்றியது

ஹவுரா, ஜன. 27—

இங்குள்ள பெண்கள் கல்லூரியில் இந்திய மாணவர் சங்கம்(எஸ்.எப்.ஐ) அமோக வெற்றி பெற்றது.

மாணவிகள் கவுன்சிலின் 31 இடங்களுக்கு நடந்த தேர்தலில் 19 இடங்களில் எஸ்,எப்.ஐ. வேட்பாளர்கள் அமோக வெற்றி பெற்றனர்.

எஸ்.எப்.ஐக்கு எதிராக அரசு இயந்திரத்தின் உதவிகளுடன் பல்வேறு சதிகளிலும், மோசடிப்பணிகளிலும், சாகச முயற்சிகளிலும் ஈடுபட்ட போதிலும் ஆளும் காங்கிரஸ் மாணவர் இயக்கமான சத்ரபரிசத் 11 இடங்களையே பெற முடிந்தது.

இந்திரா காங்கிரசின் மற்றொரு பிரிவான ஷிக்சா பசால் கமிட்டி ஒரே ஒரு இடத்தில்தான் வெற்றிபெற்றது:

எஸ்.எப்.ஐ.யின் இந்த வெற்றியைக் கொண்டாடும் வகையில் மாணவிகள் அப்பகுதியில் பெரும் ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

குமரி ஆசிரியர்கள் போராட்டம் நின்றது

தக்கலை, ஜன. 25—

குமரிமாவட்டத்தில், இலட்சுமிபுரம் கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும் கடந்த 40 நாட்களாக நடத்திவந்த போராட்டம் கல்வி அமைச்சர் உறுதி மொழி அளித்ததின் பேரில் நிறுத்தப்பட்டது.

கல்லூரி நிர்வாகத்தினர் கடந்த 13 மாதங்களாக ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்காத அக்கிரமத்தை எதிர்த்தும். இக்கல்லூரியை அரசே மேற்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தியும், ஆர். டி, ஓ. அலுவலகம் கல்லூரி நிர்வாகிகளின் இல்லம், கிராம அலுவலகம் ஆகியவற்றின் முன்பு ஆசிரியர்களும் மாணவர்களும் போராட்டம் நடத்தி வந்தனர்.

இப்போராட்டத்துக்கு ஆதரவாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சியும் சிஐடியூ, இந்திய மாணவர் சங்கம் முதலிய அமைப்புக்களும் பல்வேறு இயக்கங்கள் நடத்தின.

மாநில கல்வி அமைச்சர் நெடுஞ்செழியன், கடந்த 18ந்தேதியன்று குமரிமாவட்டத்துக்கு வந்தபோது, கல்லூரியை அரசு மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் தற்காலிகமாக காப்பாளர் ஒருவரைநியமனம் செய்வதாகவும் கூறிய உறுதி மொழியின் அடிப்படையில் போராட்டம் நிறுத்தப்பட்டுள்ளது.

முகவரி மாற்றம்

சிதம்பரம்தாலுகாமார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, மற்றும் விவசாயத் தொழிலாளர் சங்கம் ஆகியவற்றின் அலுவலகங்கள் 15—1—75 முதல் கீழ்வரும் முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளதாக தோழர் டி. ஆர். விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

41-ஏ, கொத்தங்குடி தெரு,
சிதம்பரம்,
தென் ஆற்காடு மாவட்டம்.

சிஐடியூ — அதிமுக — காங்கிரஸ் சார்பில்

கோட்டை நோக்கி போக்குவரத்து தொழிலாளர் 4 ஆயிரம் பேர் ஊர்வலம்

சென்னை, ஜன. 25—

நாலாயிரத்துக்கும் மேற்பட்ட போக்குவரத்து ஊழியர்கள் உரிமை முழக்கங்கள் எழுப்பி பெரும் ஊர்வலமாகச் சென்று கோட்டை முன்பும், போக்குவரத்து இல்லம் முன்பும் உணர்ச்சி மிக்க ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

கடந்த 21-ந் தேதி காலையில் நேப்பியர் பூங்காவிலிருந்து புறப்பட்ட இந்த ஊர்வலத்துக்கு சி ஐ டி யூ சங்கத் தலைவர் வி. பி. சிந்தனும், காங்கிரஸ் சங்கத்தலைவர் என். எம். மணிவர்மாவும் தலைமை வகித்துச் சென்றனர்.

கோட்டையில் முதலமைச்சர் கருணாநிதியைச் சந்தித்து மகஜர் அளித்து கோரிக்[illegible]ள வற்புறுத்தினர்.

அகில இந்திய விலைவாசிப்புள்ளி 200க்கு ரூ.350 சம்பளமும், அதற்குமேல் உள்ள ஒவ்வொரு புள்ளிக்கும் ரூ. 1-75 பஞ்சப்படியும் அளிகக்கோரியும்,தமிழகம் முழுவதும் போக்குவரத்துக்குஒரேவாரியம்அமைக்க கோரியும் பிரச்சனைகள் குறித்து, அங்கீகார சங்கத்தோடு மட்டுமின்றி பதிவு செய்யப்பட்ட அனைத்துச் சங்கங்களோடும் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்னைகளை தீர்க்கவேண்டும் என்று வற்புறுத்தியும்அரசுபோக்குவரத்து மற்றும் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் இருக்கும் சி ஐ டி யூ, அண்ணா தொழிலாளர் சங்கம், தேசியத் தொழிலாளர் சங்கம் ஆகியவற்றின் சார்பில் இந்த ஊர்வலம் நடந்தது.

வலது கம்யூ.வை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

சோசலிஸ்ட் முடிவு

சென்னை, ஜன. 25—

வலது கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராக சோசலிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம் நடத்தும் என்று அக்கட்சியின் செயலாளர் க. ர, நல்லசிவன் ஓர் அறிக்கையில் கூறியுள்ளார்.

'அடுத்தமாதம் தமிழகத்துக்கு வரவிருக்கும் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணனுக்கு எதிராக, ஆளும் காங்கிரஸ் ஆதரவுடன் கறுப்புக்கொடி காட்டுவது என்று தமிழக வலது கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் எம். கல்யாணசுந்தரம் அறிவித்துள்ளார்.'

அவ்வாறு ஜெயப்பிரகாஷ் நாராயணனுக்கு தமிழகத்தில் எங்கு கறுப்புக் கொடி காட்டப்பட்டாலும் அதனை எதிர்த்து தமதுகட்சி ஆர்ப்பாட்டம் நடத்தும் என்று அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மின்தொழிலாளர் சிறப்புக்கூட்டம்

மதுரை, ஜன. 26—

தமிழ்நாடு மின்சார ஊழியர் மத்திய அமைப்பின் சிறப்புமாநாடு மதுரை சௌராஷ்டிரா உயர்நிலைப் பள்ளியில் (ஜான்சிராணி திடல் சமீபம்,) இன்று நடைபெற்றது,

மதுரை, ராமநாதபுரம், திருச்சி, நெல்லை, கன்னியாகுமரி, கோவை, சேலம் ஆகிய மாவட்டங்களிலிருந்து200 க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்,

பிரதிநிதிகளின் கோஷங்களுக்கிடையே தோழர் பி. சி. வேலாயுதம் மத்திய அமைப்பின் கொடியினை ஏற்றிவைத்தார்.

தோழர் மீனாட்சிசுந்தரம் தலைமை வகித்த மாநாட்டுக்கு வந்திருந்த பிரதிநிதிகளையும் தலைவர்களையும் தோழர் ஜி ஜி. சுந்தரம் வரவேற்றுப்பேசினார்,

தலைவரின் தலைமையுரைக்குப்பின் சி. ஐ.டி.யூ. தமிழ் மாநிலக்குழுத்தலைவர் தோழர் கே ரமணி மின்தொழிலாளர் மத்திய அமைப்பின் பொதுச்செயளாளர்தோழர் து. ஜானகிராமன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

கிராமங்களில் மார்க்சிஸ்ட்.....

(1-ம் பக்க தொடர்ச்சி)

பாரபத்தி. வலையங்குளம், ஒத்த ஆலங்குளம், பெரிய ஆலங்குளம். கொம்பாடி, எலியார்பத்தி, நெடுமதுரை தொட்டியபட்டி, கல்லுபட்டி ஆகிய கிராமங்களில் 1171 கையொப்பங்களும்

மற்றொரு குழுதோழர் கே. சுப்பையா தலைமையில் சோளங்குருணி, நல்லூர், குசவன்குண்டு, பிள்ளையார் பட்டிஆகிய கிராமங்களுக்கு சென்று 815 கையொப்பங்களும் சேகரித்தனர்.

திருப்பரங்குன்றம்

திருப்பரங்குன்றம் பகுதியில் தோழர்செந்திவடிவேல் தலைமையில் சென்ற குழு நிலையூர், சம்பக்குளம், பாரப்பட்டி, கருவேலம்பட்டி, கூத்தியார்குண்டு, தோப்பூர் ஆகிய கிராமங்களில் 699 கையெழுத்துக்களும்

தோழர்கள் கே. பூச்சி, டி. எஸ். சுந்தரராஜன் தலைமையில் சென்ற மற்றொரு குழு தணக்கன்குளம், வேடர்புளியங்குளம், சாக்கிலிபட்டி, தென்பழஞ்சி ஆகிய கிராமங்களில் 311 கையொப்பங்களும் சேகரித்தனர்.

புதுக்கோட்டை

இப்பகுதியில் உள்ள வெள்ளைப்பாரப்பட்டி,மேலக்குயில்குடி, கரடிபட்டி, கீழக்குயில்குடி, வடபழஞ்சி, மணப்பட்டி, ஆலம்பட்டி, சின்ன சாக்கிலி பட்டி, வ.முத்துப்பட்டிஆகிய கிராமங்களுக்கு தோழர்கள் சக்திவேல், மோகன் ஆகியோர் தலைமையில் சென்ற குழுவினர் 765 கையொப்பங்கள் சேகரித்தனர்.

தோழர்கள் சென்ற இடங்களிலெல்லாம் கிராம மக்கள் உற்சாக வரவேற்பளித்து தங்களது அல்லல்களையும், துன்ப துயரங்களையும் மனம் நொந்து கூறினர்.

இ. காங். மோதல் கூண்டோடு ராஜினுமா

புதுக்கோட்டை, ஜன 25—

புதுக்கோட்டை நகர இந்திரா காங்கிரஸ் கமிட்டி தலைவர் வழக்கறிஞர் எஸ் சேஷன், செயலாளர் எம் வைத்தியநாதன் உட்பட அனைவரும அக்கட்சியிலிருந்து கூண்டோடு ராஜினுமாச் செய்து விட்டனர்.

இதுகுறித்து எம் வைத்தியநாதனை நமது நிருபர் சந்தித்துக் கேட்டபோது இந்த நகரில் இக்கட்சிக்கு உறுப்பினர்களும் ஆதரவாளர்களுமாக இருந்த 250 பேரும் விலகி விட்டதால் இப்போது, இந்நகரில் இந்திரா காங்கிரசுக்கு ஆளே இல்லையென்று, அவர் கூறினர்.

ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவரின் தான்தோன்றித்தனப் போக்காலும், காந்தியின் வாரிசு என்று சொல்லிக் கொள்ளும் அவர் மது அருந்துவதைக் கைவிட மறுப்பதாலும தாங்கள் ராஜினுமாச் செய்ததாகவும் அவர் மேலும் கூறினர்.

தமிழக வலது கம்யூனிஸ்ட் மாநாடு பற்றி ஒரு விமர்சனம்

இரயில்வேத் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை வழங்க மறுத்து, வேலை நிறுத்தம் துவங்குவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னதாகவே தொழிற்சங்க தலைவர்களை கைது செய்து சிறையிலடைத்த மத்திய அரசின் அடக்குமுறைகளை நியாயப்படுத்துகின்றனர் வலதுகம்யூனிஸ்டுகள்.

மார்க்சிஸ்டுகளும், சோசலிஸ்டுகளும் இந்தப் போராட்டத்தை "அதிதீவிரமான" வழியில் நடத்திச் சென்றதால் தான் மத்திய அரசு அளவு கடந்த அடக்குமுறையை பயன்படுத்தியது. ஆகவே, இரயில்வேத் தொழிலாளர் மீது நடந்த அடக்குமுறைக்கு மத்திய அரசு பொறுப்பல்ல. மார்க்சிஸ்டுகளும், சோஷலிஸ்டுகளும்தான் காரணம்.

பதவித் துண்டுகளை வீசி எறிந்து தரும் எஜமானிடத்தில் எவ்வளவு விசுவாசம்! அடக்குமுறையை நியாயப்படுத்த மார்க்சிஸ்டுகளும், சோஷலிஸ்டுகளும் போராட்டத்தைஅதிதீவிர வழியில்நடத்திச் சென்றதாக அவதூறு செய்கின்றனர்.

இரயில்வே தொழிலாளரின் அடிப்படையான எந்தக்கோரிக்கைகளையும் போராட்டத்திற்கு முன்பும், போராட்ட காலத்திலும், இன்றும் ஏற்க பிடிவாதமாக மறுத்து வரும் மத்திய அரசின் தொழிலாளி வர்க்க விரோதப் போக்கை மூடி மறைக்கின்றனர் வலதுகள். உரியகாலத்தில் போராட்டத்தை வாபஸ்பெறத் தவறியதால் போராட்டம் தோல்வியுற்றதாம். அதற்கு மார்க்சிஸ்டுகளும், சோஷலிஸ்டுகளும்தான் காரணமாம்.

இரயில்வே தொழிலாளர்களின் ஒற்றுமையையும் உறுதியையும், சீர்குலைத்து போராட்டத்தை சீர்குலைக்க டாங்கே செய்த துரோகத்தைக் கண்டித்தது பெரும் குற்றமாம்.

தொழிற்சங்க ஒற்றுமையை உருவாக்க வேண்டியது முதலாளி வர்க்கத்தையும், அரசின் தொழிலாளி வர்க்க விரோதக் கொள்கையையும் எதிர்த்தல்ல. மாருக, மார்க்சிஸ்டுகளுக்கு எதிராகத்தான் என்கிற அற்புதமான படிப்பினையை இந்த போராட்டத்திலிருந்து வலது கம்யூனிஸ்டுகள் கற்று கொண்டார்களாம்! இல்லையெனில் அவர்களுக்கு மிகப் பெரிய ஆபத்து ஏற்படுமாம்!

அவர்களது மாநில மாநாட்டு அறிக்கையில் இரயில்வே தொழிலாளர் போராட்டத்தைப் பற்றி எழுதியிருப்பதைப் பாருங்கள்:

"மார்க்சிஸ்டுகளும், சோஷலிஸ்டுகளும் இந்தப் போராட்டத்தை அதிதீவிர வழியில் இழுத்துச் சென்றதால் அளவு கடந்த அடக்குமுறையைக் கொண்டு போராட்டத்தை நசுக்க மத்திய அரசுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. மத்திய அரசின் அடக்குமுறையை எதிர்த்துப்போராடவேண்டியிருந்தது.சோஷலிஸ்டுகளுடனும், மார்க்சிஸ்டுகளுடனும் சேர்ந்து வலதுசாரி சக்திகள் இந்தப் போராட்டத்தைப் பயன்படுத்த முயற்சித்த சீர்குலைவையும் நம்மால் தடுக்க முடியவில்லை.

உரியகாலத்தில் முடிந்திருந்தால்போராட்டத்தை சமரசமாக முடித்திருக்க முடியும். போராட்டத் தலைமை உரிய காலத்தில், போராட்டத்தை வாபஸ் பெறத்தவறியதால் போராட்டம் [illegible]ல்வியுற்றது."

"தொழ[illegible]பக்கத்திற்கு இது ஒரு [illegible] பினை. தொழிலாள[illegible]றுமையை உருவாக்[illegible] மட்டும் போதாது. போ[illegible]தந்திரம் முக்கியமா[illegible] இடதுசாரி அதிதீவிர [illegible]கைகள் மூலம் போ[illegible] டத்தை வெற்றிகரமாக முடி[illegible]டியாது. த[illegible] டைய தவறுகளை மறைத்துக் [illegible]வதற்காக மார்க்[illegible] டுகள் தோழர் டாங்கே வெளி[illegible] திரித்துக் கூறி அவதூறு [illegible]

மார்க்சிஸ்டுகளி[illegible]முறியடித்து, அவர்களைத் த[illegible]ம்ப[illegible]வதன் மூலம்தான் சரியான போராட்ட ஒற்றுமை வளரும் என்பது இரயில்வே தொழிலாளர் போராட்டம் எடுத்துக் கூறும் பாடமாகும்."

"அன்ருடப் பிரச்னைகளுக்கான போராட்டங்களும் சித்தாந்தப் போராட்டங்களுடன் பிணைந்துள்ளன. மார்க்சிஸ்டு — சோஷலிஸ்டு சீர்குலைவுசித்தாந்தத்தை ஒவ்வொரு முனையிலும் முறியடித்தால்தான் தொழிலாளி வர்க்க ஒற்றுமையைக் கட்ட முடியும்.

இந்த போர்த்தந்திரத்தில் விழிப்பு குறைந்தால், மார்க்சிஸ்டுகள் தவருன கோஷங்களை வைத்து காங்கிரஸ், அண்ணா தி. மு. க., தி. மு. க. ஆகிய கட்சிகளைக்கூட குழப்பி நமது இயக்கத்தின் மீது நிர்ப்பந்தத்தைக் கொண்டு வருவார்கள்."

"எச்சரிக்கையுடன் முன்கூட்டியே மார்க்சிஸ்டுகளின் சீர்குலைவை முறியடிக்க வேண்டும், இரயில்வே தொழிலாளர் போராட்ட அனுபவமும், படிப்பினைகளும், தொழிற்சங்க இயக்கம் முழுமைக்கும் பொதுவானவை. இடதுசாரி திரிபுகளை எதிர்த்துப் போராட வேண்டியது தொழிலாளி வர்க்க ஒற்றுமைக்கு அவசியம். அப்பொழுதுதான் போராட்டத்தின் வெற்றிக்கும் உத்திரவாதம் ஏற்படும்."

[அழுத்தம் நம்முடையது] (சென்னையில் நடைபெற்ற வலது கம்யூனிஸ்ட் மாநில மாநாட்டில் முன்வைக்கப்பட்ட அரசியல் அறிக்கை. பக்கம் 21, 22.)

இந்தியத் தொழிலாளி வர்க்கம் பாடம் புகட்டும்

இரயில்வே தொழிலாளர்களுக்கெதிராக மத்திய அரசு கட்டவிழ்த்துவிட்ட மிருகத்தனமான அடக்குமுறையைப் பற்றி ஒருவார்த்தையுமில்லை,

அடக்குமுறைகளை தாங்கி நின்று மூன்றுவாரகாலம் வீரஞ்செறிந்த போராட்டம் நடத்தி இந்தியதொழிலாளி வர்க்க இயக்கத்திற்கே பெருமை தேடித்தந்த இரயில்வேத் தொழிலாளர்களைப் பாராட்டி ஒரு வார்த்தையுமில்லை.

சுதந்திர இந்தியாவில் முதன்முறையாக இரயில்வே போராட்டத்திற்கு ஆதரவாக நடைபெற்ற நாடு தழுவிய அனைத்துத் தொழிலாளர் வேலைநிறுத்தம் பற்றி நினைக்கவே அவர்களால்முடியவில்லை. இரயில்வே தொழிலாளருக்கு நியாயம் வழங்க மறுத்த இந்திரா அரசின் மீது அவர்களுக்கு எவ்வித கோபமும் இல்லை.

ஆனல் இரயில்வேத் தொழிலாளர் நலனை பாதுகாக்க ஒற்றுமையை உருவாக்கி உறுதியாக நின்று போராடிய மார்க்சிஸ்டுகள் மீதும், சோஷலிஸ்டுகள் மீதும் கடும் கோபம் கொண்டுள்ளனர்.

மார்க்சிஸ்டுகளையும், சோஷலிஸ்டுகளையும் ஒதுக்கி வைத்து முறியடித்து ஒற்றுமையை உருவாக்கப் போகிருர்களாம்! இதன்பொருள்என்ன? போராட்ட காலத்தில் அவர்கள் செய்த துரோகச்செயல் தொடர்கிறது என்பது தானே? மார்க்சிஸ்டுகளையும், சோஷலிஸ்டுகளையும் ஒதுக்கி விட்டு வேறு யாரோடு சேர்ந்து ஒற்றுமையை உருவாக்கப் போகிருர்கள் என்பதை வெளிப்படையாகச் சொல்ல வெட்கப்படுவதேன்?

தொழிலாளி வர்க்க இயக்கத்தை சீர்குலைக்[illegible] காங்கிரஸ் அரசுக்கு ஆதரவளிப்பது என்பது தானே இதன் பொருள்? வலது தலைவர்க[illegible]கச்செ லுக்குரிய சரியான பாடத்தை [illegible]தொழிலாளர் மட்டுமல்ல, இந்தி[illegible] வதும் [illegible]க்கு[illegible]